# ஹிக்கடுவ நகர சபை

## காலி மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஜூன் 10 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 03 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஹிக்கடுவ நகர சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்று ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2000 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 1162/12 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் 2002 ஏப்ரல் 15 திகதி முதல் செயற்படுமுகமாக ஹிக்கடுவ நகர சபை 2001 ஏப்ரல் 15 திகதி முதல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. முன்னர் ஹிக்கடுவ பிரதேச சபைக்கு சொந்தமாகியிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் இருந்து நகர சபைக்கு சாட்டப்படும் பகுதி அறுதியாக வேறாக்கப்படல் 2011 ஜூலை 12 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானங்கள் மற்றும் செலவுகள் இரண்டு கட்டுப்பாட்டுக் கணக்குகளில் வருடத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டிருந்ததுடன், வருமானங்கள் மற்றும் செலவுகள் விடயங்களுக்காக வெவ்வேறாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்திற்காக பேரேட்டில் வெவ்வேறாக கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய வருடத்தின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலக்கம் 2757118 கொண்ட நடைமுறை கணக்கில் ரூபா 257,562 இற்கான மேலதிகப் பற்று மீதி மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 258,897 இற்கான மேலதிகப் பற்று மீதியொன்று என

காட்டப்பட்டுள்ளமையால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,335 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மீதி ரூபா 1,769,934 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,883,424 என காட்டப்பட்டுள்ளமையால், ரூபா 113,490 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 92,526 இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 64,477 இற்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) சம்பன மீளளிப்புக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 17,049,500 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இடையே பகிரப்படாமல், ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) தொடர்ந்து வரும் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான ரூபா 135,675 நீதி மன்றத் தண்டப் பணம் நாள் வழிக் குறிப்பு இலக்கம் 18 இன் மூலம் மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் என்பன அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான ரூபா 411,705 இற்கான எழுத்தானைக் கட்டணம் வருமானம், எழுத்தாணை கட்டணம் மற்றும் தண்டப்பணக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல், 26 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் பிழையான முறையில் வீத வரி வருமானம் எனக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) ரூபா 2,994,329 இற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஆதனக் கடன் வட்டி மீளளிப்பு தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்க வேண்டிய ரூபா 261,559 இற்கான தொகை நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,940,236 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,310,612 ஆகும்.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் பலவின கடன்கொடுத்தோர் மற்றும் திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் முறையே ரூபா 6,327,285 மற்றும் ரூபா 7,957,341 ஆக காணப்பட்டது. அதனோடு தொடர்புடைய பட்டோலைகளில் மீதிகள் சமப்படுத்தப்பட்டிருக்காமையால் வித்தியாசத்தை கணக்கிடுவதற்கு முடியாதுள்ளது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

(அ) தேவையான தகவல்கள், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 60,048,685 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்விற்கான ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 திகதி வரை 19 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளித்திருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 52,708,617 ஆகும்.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.) | |
| (i) | நி.பி. 102-110 | காணாமல் போதல், சேதங்கள் பற்றிய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நட்டங்கள் சேதங்கள் பற்றிய பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 261(3) மற்றும் 387 | பிரமாணங்களுக்கு முரணாக செயற்பட்டமையால் இலக்கம் 275118 கொண்ட வங்கி கணக்கு மீளாய்வாண்டின் போது மேலதிகப் பற்று நிலைமைக்கு மாறியுள்ளமையால் மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 13,055 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | நி.பி. 395(அ) மற்றும் (ஆ) | இலக்கம் 2757119 மற்றும் 2757140 கொண்ட நடைமுறை கணக்குகள் தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றுக்கள் மாதாந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி. 396(ஈ) | இலக்கம் 2757118 கொண்ட வங்கிக் கணக்கு தொடர்பாக வழங்கப்பட்டு கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்துள்ள ரூபா 35,858 இற்கான 14 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (v) | நி.பி. 571 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 7,957,341 ஆக காணப்பட்டதுடன் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களைத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vi) | நி.பி. 756 | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு உருப்படி சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | திறைசேரிச் சுற்று நிருபம் | |
| (i) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| (ii) | 2004 பெப்ரவரி 24 திகதி இலக்கம் 1/2004 கொண்ட அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரிவு 4.3 | மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,057,962 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 464,513 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் தலைவரிடம் வேண்டியிருந்த போதும் அத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

2.2.2 நிலுவை வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 8,833,059 இற்கான வீத வரி மற்றும் ரூபா 673,804 இற்கான வாடகை என்பன நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 645,880 தொகைக்காக தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 5,171,000 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 27,132 | 26,710 | 422 | 24,370 | 26,281 | (1,911) |
| ஏனையவை | 18,347 | 12,366 | 5,981 | 16,038 | 22,427 | (6,389) |
| உப கூட்டுத் தொகை | 45,479 | 39,076 | 6,403 | 40,408 | 48,708 | (8,300) |
| மூலதன செலவுகள் | 9,485 | 3,752 | 5,733 | 16,335 | 12,363 | 3,972 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 54,964 | 42,828 | 12,136 | 56,743 | 61,071 | (4,328) |

2.4 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 05 | 02 |
| இரண்டாரம் தரம் | 22 | 16 |
| ஆரம்ப தரம் | 50 | 44 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 55 |

2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட முகாமைத்துச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ பிரதியீட்டு/ ஒப்பந்த மற்றும் ஏனைய ஏதேனும் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் அதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள போதும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் சபையினால் அமைய, பிரதியீட்டு, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் 55 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,346,223 ஆக காணப்பட்டதுடன் ஒரு வருடத்தை விஞ்சிய காலம் அறவீடுகள் நிலுவையாகவுள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,750 ஆகும்.

2.6 மிகை விதிப்புக்கள்

--------------------------------

மீளாய்வாண்டு இறுதி வரை நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 881 ஆகும்.

2.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------------

நகர சபைக்கு சொந்தமான ரூபா 4,300,000 பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரம் 2008 மார்ச் 24 திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்தது. திருத்த வேலைக்காக 2008 ஏப்ரல் 08 திகதி ஒப்படைத்திருந்ததுடன் ரூபா 2,698,150 இற்கான மதிப்பீடு ஒன்று முகவர் நிலையத்தினால் சபைக்கு வழங்கியிருந்தது. இது தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விபத்துக்கள் தொடர்பாக காப்பறுதி நலன்கள் பெறுவதற்கு விண்ணப்பிருந்த போதும், காப்புறுதி நிறுவனத்தினால் நலன்கள் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அரச நிதிப் பிரமாணங்கள் 102-110 பிரகாரம் ஏற்பட்டுள்ள நட்டங்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) 2011 ஜூலை 07 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது லோட்டர் பெக்கோ இயந்திரத்தின் என்ஜின் பகுதி மாத்திரம் நகர சபை கராஜில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(iv) இயந்திரம் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்திருந்த போதும் திருத்த வேலைகள் செய்யப்படாமையால் சொத்துக்கள் அழிவடையும் இடர் ஒன்று காணப்பட்டதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

2.8 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2008 செப்டம்பர் மாதத்தில் ரூபா 40,810,041 தொகை பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் உடனான நோயார் காவு வண்டி மற்றும் விபத்து உபகரணங்கள் உடனான தீ அணைக்கும் வண்டி ஒன்று சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2011 ஜூலை 07 திகதி வரை 2 வருடங்களும் 10 மாதங்கள் கழிந்துள்ள போதும் வாகனங்களின் உரிமை சபைக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக் காலப்பகுதியில் வாகனம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அதே போல் வாகனங்களின் பெட்டரி மற்றும் ஏனைய மேலதிக உபகரணங்கள் கலற்றப்பட்டு அகற்றப்பட்டு இருந்தன என அவதானிக்கப்பட்டது.

2.9 முறையற்ற கொடுப்பனவுகள்

--------------------------------------------

நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255ஆவது அதிகாரம்) பிரிவு 159(1)(ஊ) இன் பிரகாரம் பொது முக்கியத்துவமுடைய கருமங்களுக்கான கொண்டாட்டச் செலவுகள் தொடர்பாக ஏதேனும் ஒரு வருடத்திற்கு மொத்தக் கூட்டுத்தொகை ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவாறு இருக்க வேண்டும். அத்துடன் அதனை விஞ்சுமிடத்து அதற்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை எழுத்துமூலம் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும், அவ்வாறு

அங்கீகாரத்தை பெறாமல் 2010 ஆண்டின் போது கொண்டாட்ட செலவுகளுக்காக ரூபா 382,394 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

2.10 செயற்பாட்டுத் திறமையின்மை

---

(அ) செயற்படாத வங்கிக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,248 இற்கான செற்படாது காணப்பட்ட இடர் முகாமைத்துவ வங்கி நடைமுறைக் கணக்கினை மூடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முற்கலவை தயாரித்தல் மற்றும் வினியோகித்தல்

---

முற்கலவை தயாரித்தலுக்காக 2010 மார்ச் 10 திதகி 200 லீட்டர்கள் கோலாஸ் 10 பீப்பாக்கள் ரூபா 166,613 இற்கு கொள்வனவு செய்து இருப்பு பதிவேட்டில் உட்படுத்தியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்கலவை உற்பத்திற்காக தேவையாக ஏனைய பொருட்களாகிய மணல் மற்றும் கீப் கற்கள் என்பன பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கள் என்பன இருப்பு பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ii) அதே போல் உற்பத்தி செயற்பட்ட முற்கலவை தொகை மற்றும் வேலைகளுக்காக வழங்கிய முற்கலவை தொகை என்பன பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் இருப்பு கட்டுப்பாட்டு மிகவும் பலவினமான நிலைமை ஒன்றில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிருவாகம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) இருப்புக் கட்டுப்பாடு